# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1285/13 - 2003 අප්‍රේල් 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2003.04.24

*1285/13 ஆம் இலக்கம் - 2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. - பீ 21/78 V*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சர் கபீர் ஹாஷீம் ஆகிய நான், 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தொடர்பாக அச்சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பயிற்சி நெறிகளில் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக, பட்டதாரிப் பட்டம் வழங்கும் நிறுவகமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

கபீர் ஹாஷீம்,
மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சர்.

கொழும்பு,
2003, ஏப்பிறல் 01.

அட்டவணை

1. பொது நிருவாகத்தில் பட்டப்பின்படிப்பு திப்புளோமா
2. பொது நிதி முகாமையில் பட்டப்பின்படிப்பு திப்புளோமா
3. பொது முகாமையில் முதுமானிப்பட்டம்

5-170